www.tamilarangam.net

# தமிழர் திருநாள் வாழ்த்து!



தமிழர் நாடு தமிழருக்கே என சங்கே முழங்கு.

www.tamilarangam.net

## வேண்டும் விடுதலை

முடங்கி வளைந்த முதுகே நிமிர்வாய்!
நடுங்கிக் கிடந்த நாட்கள் தொலைந்தன!
காய்ந்த தமிழன் கண்ணை விழித்தான்!
தேய்ந்த வீரம் திரும்பி வந்தது!
நில்லடா தம்பி நெருப்பில் நீ நட!
கொல்லும் சாவினைக் கூப்பிட்டழைப்பாய்!
போனாலும் உயிர்போய்த் தொலையட்டும்!
மானம் காத்து மண்டையைப் போடு!
தமிழன் நாட்டைத் தமிழன் ஆளும்
அமிழ்தப் பொன்னாள் இந்நாள் மலர்க!
வெள்ளமே விரைந்து வா விடுதலை
கொள்ளும் நாளைக் கொண்டு வருகவே!

—உணர்ச்சிப் பாவலர் காசி ஆனந்தன்

அளப்பரிய ஆழிசூழ்ந்த உலகைக் காக்கும்
அச்சாணி உழவரென்று போற்றும் நந்நாள்
உளங்கவரும் பொங்கல்நாள் இந்நாள் பொன்னாள்
உயிர்போக்கும் நல்குரவும் மடியும் மங்கி
வளம்பொங்கி, மனமகிழ்ச்சி என்றும் தங்கி
வாட்டும் நோய் இல்லாத இன்பம் பொங்க
களங்கமில்லா உளத்தோடு வாழ்த்துக் கூறிக்
களிப்புறவோம் என்னாளும் ஒன்று பட்டே.

## தமிழர்களுக்கோர் வேண்டுகோள்!

*கதைபேசிக் கொண்டிருக்க நேரமில்லை*
*காலம்வரும் என்பதிலும் சாரமில்லை!*

தாய்த் தமிழகம் உரிமை பெற்ற தனிநாடாக அமைவதற்குத் தன்மானமுள்ள அனைத்துத் தமிழர்களும் ஓர் கொள்கை உறுதிப் பாட்டை இப்பொங்கல் திருநாளில் தங்கள் தங்கள் உள்ளங்களில் ஏற்றாதல் வேண்டும்!

நம்முடைய எண்ணம் எழுத்து பேச்சு மூச்சு செயல் அனைத்திலும் '*செய் அல்லது செத்துமடி*' என்னும் அந்த வீரிய சீரிய கொள்கை உறுதிப்பாடே வெளிப்பட்டாதல் வேண்டும்.

நம் நற்றமிழ் நாடு விடுதலையுற்று தன்னாட்சிப் பெற்று விளங்கும் உயரிய கொள்கையை அடைய நாம் நம் உயிரையும் கொடுக்க அணியமாயிருக்க வேண்டும்.

நம் அடிமைத்தனம் நீடிப்பதைப் பார்த்துக் கொண்டு நாம் வாளா இருக்கக் கூடாது.

விடுதலைப் போரில் உயிரை இழப்பவனே உண்மையில் உயிரைப் பெறுகிறான்; உயிரைப் பாதுகாக்க முயற்சிப்பவன் உண்மையில் உயிரை இழக்கிறான்.

*வீட்டைப் பூட்டிக் குடும்பத் தோடு*
*நாட்டை மீட்க இன்றே ஓடு*

— புரட்சிப் பாவலர்

*சேதாரம் இல்லாமல் நகைசெய்ய இயலாது!*
*சிலரேனும் மடியாமல் பகைவெல்ல முடியாது!*

—அறிவியப் பாவலர்

www.tamilarangam.net

